# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை (26.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 301


# புல்மோட்டைக் கடற்பகுதியில் நேற்று அதிகாலை உக்கிர சமர்

## கடற்புலிகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தியதாக அரசு அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 26

**முல்லைத்தீவுக்கு தென்கிழக்கேயுள்ள புல்மோட்டைக் கடலில் இலங்கைக் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை உக்கிரக் கடற்சமர் ஒன்று இடம் பெற்றிருக்கின்றது.**

**சுமார் ஐந்து மணி நேரம் இடம்பெற்ற இச்சமரில் கடற்புலிகளின் படகு அணி ஒன்றைத் தாக்கி, அவர்களுக்கு பேரழிவை கடற்படையினர் ஏற்படுத்தினர் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.**

முல்லைத்தீவுக்கு சுமார் 40மைல் தென்கிழக்கே புல்மோட்டைக் கடலில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை இச்சமர் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடற்புலிகளின் சுமார் 25 படகுகளைக் கொண்ட கடற்புலி அணியொன்றை கடற்படையினர் இனங்கண்டு அதன் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தனர் என்றும் -

இத்தாக்குதலில் புலிகளின் பதினொரு படகுகள் தாக்கி அழிக்கப்பட்டன என்றும் - கடற்படைப் பேச்சாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட கடற்புலிகளின் 11படகுகளில் இரண்டு படகுகள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### குருமண்காட்டில் ஊர்காவலர் காயம்

வவுனியா, செப். 26

வவுனியா குருமண்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.10 மணிக்கு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் ஊர்காவல் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்து வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதிரோந்து நடவடிக்கையிலீடுபட்டிருந்த பொலிஸார் மீது இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் இதன்போது ஊர்காவல் படைச்சிப்பாய் காயமடைந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்த சமயம் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் கைக்குண்டு ஒன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கைக்குண்டினைப் பொலிஸார் செயலிழக்கச் செய்துள்ளனர். (த)

## ரோந்து சென்ற கடற்புலிகளுடனேயே சமர் இடம்பெற்றதாக புலிகள் அறிவிப்பு

### தமது தரப்பில் மூவர் வீரச்சாவு என்றும் இளந்திரையன் தெரிவிப்பு

புல்மோட்டைக் கடற்பரப்பில் கடல்ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் ஞாயிறு இரவு மோதல் நடந்தது என்று அறிவித்திருக்கின்ற விடுதலைப் புலிகள், இச்சமரில் தமது தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்றும் தெரிவித்திருக்கின்றனர். இது தொடர்பாக புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்திருப்பதாவது:-

''புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை இரவு மோதல் நடைபெற்றது.

முல்லைத்தீவின் கிழக்குப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் (08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இன்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் ஜொஹான் சோல்பெர்க் சந்திக்கவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழ்ச்செல்வனின் அழைப்பின் பேரிலேயே அவரைச் சந்திக்கக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கிளிநொச்சிக்கு வருகிறார் என்று விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார் என்று இணையத்தளம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது என்னென்ன விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவிருக்கின்றன என்ற விவரங்கள் தெரியவரவில்லை. (த)

### உயிலங்குளம் பாதையில் நேற்று போக்குவரத்து

கொழும்பு, செப்.26

மன்னார் - உயிலங்குளம் நுழைவாயில் நேற்று பொதுமக்களின் போக்குவரத்துக்கெனத் திறந்துவிடப்பட்டதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விசுவலிங்கம் தெரிவித்தார்.

அதன்படி நேற்று நண்பகல் 12 மணியளவில் உயிலங்குளம் பாதையூடாக மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கும், கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் மாலை 6 மணிவரை பொதுமக்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அங்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியைத் திறக்குமாறு இரு தரப்பிடமும் கண்காணிப்புக்குழு மீண்டும் கோரிக்கை

### புலிகள் இணக்கம், அரசு பின்னடிப்பு என்கிறார் பேச்சாளர்

கொழும்பு, செப்.26

ஏ-9 நெடுஞ்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடுதலைப் புலிகளிடமும் அரசுத்தரப்பிடமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. இதற்கு அரசிடமிருந்து இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை என கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கின் சில பிரதேசங்களில் இன்னமும் நிச்சயமற்ற சூழ்நிலையே நிலவுகின்றது என்றும் அவர் கூறினார்.

இந்த நிலைமை காரணமாக வன்னிப் பிரதேச மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஏ-9 வீதியை முகமாலையிலும், ஓமந்தையிலும் மீண்டும் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஏற்கனவே இரு தரப்புகளிடமும் முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிப் பிரதேசத்துக்கும் பொருள்களைக் கொண்டுசெல்வதில் ஏ-9 நெடுஞ்சாலை மிகவும் முக்கியமானது. இவ்விடயம் தொடர்பாக கடந்த 10

(08ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய சேவைகள் பிரகடனம்: நேற்றைய வர்த்தமானி அறிவித்தல் ரத்து!

### திருத்தங்கள் செய்வதற்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, செப்.26

சில பொதுச் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்து அரசு நேற்று வெளியிட்ட வர்த்தமானிப் பிரகடனம் பின்னர் ஜனாதிபதியின் தலையீட்டை அடுத்து ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்குடன் இந்த அத்தியாவசிய சேவைகள் பிரகடனத்தை அரசு வெளியிட்டிருந்தது. எனினும், சில தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியதையடுத்து வர்த்தமானி பிரகடனத்தில் திருத்தங்கள் செய்து புதிதாக வெயிடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிக்குப் பணிப்புரை விடுத்தார் என்று தெரியவந்தது.

வங்கி நடவடிக்கைகள், சுகாதார சேவைகள், பெற்றோலிய உற்பத்தி, எரிவாயு உட்பட எரிபொருள் விநியோகம், மின்சாரம், தபால் மற்றும் தொலைத் தொடர்புகள், சார்ந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சார்ந்த சேவைகள், போக்குவரத்து, பெருந்தோட்டத்துடன் தொடர்புடைய சேவைகள், பொருள் உற்பத்தி, வானொலி மற்றும் தொலைக்காட்சி, சேவைகள், உணவுப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணத்துக்கென நேற்றும் ஆயிரம்பேர் காங்கேசன்துறைக்கு!

### திருமலையிலிருந்தும் பயணிகளுடன் கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம்.செப்.26

கப்பல் மூலம் திருமலைக்கு பயணிப்பதற்கென சுமார் ஆயிரம் பேர் நேற்றும் காங்கேசன்துறைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை முதல் யாழ்.சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் கூடியவர்கள், சோதனைக்குப் பின்னர் பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - நேற்றையதினம் கப்பல் பயணத்துக்கென அழைத்துச்செல்லப்பட்டவர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் அநேகர் என்றும் -

பெரும்பாலும், விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களே இவ்வாறு கப்பல் பயணத்துக்கெனப் பயணமாகியுள்ளனர் என்றும் -

இவர்களுடன் இதுவரை சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் திருமலைக்கு பயணமாகியுள்ளனர் என்றும் - பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.


இதேவேளை-

ஏ-9 வீதி மூடப்பட்டதை அடுத்து வவுனியா

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**



மூதூரிலிருந்து மக்களை வெளியேறுமாறு கோரி வெளியான துண்டுப்பிரசுரத்தால் அங்கிருந்து கிண்ணியாவுக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதையும், பாடசாலையென்றில் தஞ்சமடைந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சங்கக் கிளைகள் மீண்டும் திறக்கப்படாததால் சிரமம்

தென்மராட்சி.செப்.26

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களையடுத்து மூடப்பட்ட தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைகள் இன்னமும் திறக்கப்படாததால் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் நவஜீவனம், கெற்பேலி, தவசிகுளம் ஆகிய கிளைகளே மூடப்பட்டு தற்போது கொடிகாமம் நகர்ப்பகுதியில் இயங்குவதாகவும் - இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த 800இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

## தென்மராட்சி தெற்கில் காலபோகச் செய்கைக்கு இதுவரை அனுமதியில்லை

தென்மராட்சி.செப்.26

தென்மராட்சி தெற்கு - மறவன்புலோ, கொல்லங்கிராய் ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் நெற்செய்கைக்கான ஆரம்பக்கட்ட வேலைகள் மேற்கொள்ள முடியவில்லை என நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறிப்பிட்ட பகுதிகளில் நெற்செய்கைக்கான ஆரம்பக்கட்ட வேலைகளை மேற்கொள்ளச் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாவும் - கூறப்பட்டது.

## ஆட்லறி இயந்திரம் சூடேறி வெடித்ததில் சிப்பாய் உயிரிழப்பு; மற்றுமிருவர் காயம்!

**எழுதுமட்டுவாள் பகுதியில் சனியன்று சம்பவம்**

யாழ்ப்பாணம்.செப்.26

ஆட்லறி ஷெல்வீச்சு நடத்திக்கொண்டிருந்த வேளையில் இயந்திரம் சூடேறி வெடித்தில் அதனை இயக்கிக்கொண்டிருந்த சிப்பாய் ஒருவர் பலியானார், மற்றுமிரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஷெல் செலுத்தும் பிரிவைச்சேர்ந்த எம்.ஜே.சமன்குமார என்பவரே பலியானவரார். காயமடைந்த இருவரும் பலாலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சாவகச்சேரி நீதிவான் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், பலாலி தலைமையகத்தில் பலியான சிப்பாயின் சடலத்தையும் பார்வையிட்டு, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸாரைப் பணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தென்மராட்சி பிரதேச விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு

தென்மராட்சி.செப்.26

ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமக்குரிய விண்ணப்பப்படிவத்தினை நாளை புதன்கிழமை தத்தமது பாடசாலை அதிபர்களிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டாளரின் பெயர், குறியீட்டு எண், பதவி, பாடம், சொந்த முகவரி ஆகிய விவரங்களை எழுதி கையளிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

**யாழ். போதனா வைத்தியசாலையில்**

## பராமரிப்பு பெட்டியில் வைத்திருந்த குழந்தையை வெளியே எடுத்து வீசியவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம்.செப்.26

யாழ். ஆஸ்பத்திரியில் நிறைகுறைந்த நிலையில் - முதிர்ச்சி அடையாத நிலையில் - பராமரிப்பு பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சிசுவை எடுத்து வெளியில் வீசிய பெண்ணை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்தார். அக்குழந்தை நிறை குறைவு காரணமாக பராமரிப்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை - மற்றொரு பெண் பிரசவித்த குழந்தையும் பராமரிப்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் குறிப்பிட்ட பெண் மற்றைய பெண்ணின் குழந்தையை எடுத்து வெளியில் வீசியுள்ளார். இந்த நிலையில் வெளியில் வீசப்பட்ட குழந்தையின் தாயார் பராமரிப்புப் பெட்டியைப் பார்த்தபோது குழந்தையைக் காணாததை அடுத்து அதிர்ச்சியடைந்துள்ளார். இது விடயமாக உடனடியாக ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது பிரசவ வார்ட்டுக்கு அருகில் இருந்து குற்றுயிர் நிலையில் மீட்கப்பட்ட குழந்தை, வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தது.

இச்சம்பவம் குறித்து யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் நேற்று விசாரணை நடத்தினார்.

குழந்தையை எடுத்து வீசிய பெண்ணைக் கைது செய்து விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

குழந்தை பிரசவித்த நிலையில் இப்பெண் இருப்பதாக நீதிவான் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து சிறைக்காவலரின் பாதுகாப்பில் வைத்தியசாலையில் வைத்திருக்கும் படியும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (1)

## சம்மேளனம் ஊடாக மானிய விலையில் உரம்

யாழ்ப்பாணம்.செப்.26

யாழ்.மாவட்டத்தில் விவசாய சம்மேளனம் ஊடாக மானியத்தில் உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையில் நெற்செய்கை விவசாயிகளுக்கு உரமானியத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் உரம் வழங்குவதற்கான படிவங்கள் விவசாய சம்மேளனம் ஊடாக வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் மேற்படி படிவங்களைப் பூரணப்படுத்தி விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளர் கையொப்பத்துடன் சம்பந்தப்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி படிவங்கள் திரட்டப்பட்டதும் தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் உரம் பெற்றுக்கொடுப்பதற்கு யாழ்.அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-95)

## பண்டத்தரிப்பு, பெரியவிளான் பகுதிகளிலும் முள்முருக்கையில் புதுவிதமான நோய்

வலி.தென்மேற்கு,செப்.26

பண்டத்தரிப்பு, பெரியவிளான் மற்றும் மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளிலும் கால் நடைகளின் முக்கிய உணவான முள் முருக்கை இலைகளில் புதுவிதமான நோய் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவற்றை வீடுகளில் இருந்து வெட்டி அழிக்கும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

நீண்ட காலமாக ஆடு, மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்திவரும் இந்த முள் முருக்கை மரங்களின் இலைக் குருத்துகளில் திரண்ட சிறிய காய்போன்றதும், தடிப்பு மிக்கதுமான இலைகள் உருமாறி விடுவதாகவும்-

இவற்றை கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்துவதால் பாரிய நோய்த்தாக்கம் அவற்றிற்கு ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் திரண்ட காய்களுக்குள் சிறிய குழவி போன்ற வண்டுகள் காணப்படுகின்றன என்றும் -

இதனால், மனிதர்களுக்கும் சிலவகை நோய்கள் ஏற்படும் ஆபத்து உள்ளது என்றும் - இப் பகுதிகளில் பரவலாகப் பேசப்படுகின்றது. பிரதேசத்திலுள்ள வீட்டு வேலிகளிலும் இந்த மரங்கள் அதிகளவில் நடப்பட்டிருப்பதால், அவற்றை வெட்டி முற்றாக எரித்து அழித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை - திருநெல்வேலியிலுள்ள அரசாங்க விவசாய பயிர் ஆராய்ச்சி நிலையத்தினர் இந்த முள் முருக்கை மரத்தில் ஏற்பட்டிருக்கும் புதியவகை நோய் பற்றியும் -

அதனால் கால்நடைகளுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் ஏற்படும் நோய் ஆபத்து பற்றியும் ஆராய்ந்து கருத்து தெரிவித்தால் நல்லது என்றும் இப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (135)

## வலி.தென் மேற்கில் மக்கள் குழு அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

வலி.தென்மேற்கில் மக்கள் குழு அமைக்கப்படவுள்ளது. மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும் மத்தியஸ்த சபையின் உறுப்பினருமான எஸ்.எஸ்.தங்கராஜா இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வலி.தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவிலும் உள்ள சமாதான நீதிவான்கள், கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், மத்தியஸ்தர்கள், அரசாங்க அதிகாரிகள், விரிவுரையாளர்கள், இளைப்பாறிய அலுவலர்கள் ஆகியோரை இணைத்தே இக் குழு அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரிவிற்கான மக்கள் குழு அமைக்கப்பட்டவுடன் காணாமல் போதல், கைதுசெய்தல், துன்புறுத்தல் போன்றவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (95)

## காலபோக செய்கைகுறித்து பெரியவிளானில் கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு.செப்.26

பெரியவிளான் விவசாயிகள் சம்மேளனத்தில் காலபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் க.சிவராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கீரிமலை கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி.சா. குகனேசன் கலந்து கொண்டு விவசாயிகளின் முக்கிய தேவைகள் பற்றி கேட்டறிந்து கொண்டார்.

காலபோக நெல்விதைப்புக்குத் தேவையான உரம், கிருமிநாசினி மற்றும் களைகொல்லி ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் கேட்டுக்கொண்டனர். (135)

## பருத்தித்துறையில் குடும்ப அட்டை விநியோகம்

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் உள்ளோரின் குடும்ப பங்கீட்டு அட்டை புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் குடும்ப பங்கீட்டு அட்டையைப் புதுப்பித்துக்கொள்ளாதவர்கள் தத்தம் பிரிவு கிராமசேவையாளர்கள் ஊடாக புதிய பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (103)

## சங்கானை தெற்கில் குடும்ப விவரம் பதிவு

சங்கானை.செப்.26

சங்கானை தெற்கு கிராம சேவகர் பிரிவில் தற்போது குடும்ப விவரப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது குடும்பத்தினருடன் சேர்ந்த நிழல்படப் பிரதிகள் இரண்டு பெற்று அதன் பின்னால், அங்கத்தவர் பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றைப் பதிந்து படையினரிடம் ஒப்படைக்கவேண்டும் என்று சங்கானை தெற்கு கிராம சேவை அலுவலர் அறிவித்துள்ளார். (29)

## நகரப்பகுதியில் பாணுக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது

அரியாலை,செப்.26

யாழ். நகரம் மற்றும் கரையோரப் பகுதிகளில் பாணுக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள வெதுப்பகங்களில் பாண் உற்பத்தி தினமும் அதிகரித்திருப்பதால் பாணுக்கு நிலவிவந்த தட்டுப்பாடு ஓரளவு நீங்கி, மக்கள் பாணைப் பெறக் கூடியதாக உள்ளதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் - வலி.கிழக்கு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, சிறுப்பிட்டிப் பிரதேசங்களில் பாணுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (17)

## கிளைகள் உடைக்கப்படுவதைத் தடுக்க மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

**கூட்டுறவாளர்கள் கோரிக்கை**

அரியாலை.செப்.26

தற்போதைய நெருக்கடி நிலைமற்றும் ஊரடங்குச்சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி இரவு நேரங்களில் ப.நோ.கூ.சங்கக் கிளைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நிவாரணம் மற்றும் பங்கீட்டு அட்டைகளுக்கு விநியோகிப்பதற்காக கூட்டுறவுக் கடைகளில் வைக்[illegible] மா, சீனி, அரிசி போன்ற பொருள்களே இவ்வாறு திருடப்படுகின்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திருட்டு முயற்சியை முறியடித்து கூட்டுறவுக்கடைகளைப் பாதுகாப்பதற்கு பொதுமக்கள் மற்றும் கிளைக் குழு உறுப்பினர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

## தொழிநுட்பவியல்நிறுவன வெளிமாவட்ட மாணவருக்கு

யாழ்ப்பாணம்.செப்.26

யாழ். உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் போக்குவரத்து வசதி குறித்துக் கலந்துரையாடுவதற்காக சம்பந்தப்பட்ட மாணவர்களை நாளை புதன்கிழமை நிறுவனத்துக்கு சமூகம் தரும்படி நிறுவனத்தின் பணிப்பாளர் வி.கருணாநிதி கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஜே.வி.பியை உதறித் தள்ள மஹிந்தவுக்கு நல்லதோர் வாய்ப்பு

ஹவானாவில் அணிசேரா நாடுகளின் மாநாடு, நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டம் என்று தமது இரண்டு வார கால வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை 'வெற்றிகரமாக' முடித்துக் கொண்டு நாடு திரும்பி விட்டார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இம்முறை வெளிநாட்டுப் பயணத்தை அவர் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் இரவு, இலங்கைக்கு உதவும் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமைகள், பிரஸல்ஸ் நகரில் கூடி இலங்கை விவகாரம் குறித்து ஆராய்ந்த பின்னர், அது தொடர்பாக முன்வைத்த காட்ட மான கூட்டறிக்கை வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதையடுத்து, தமது இடதுசாரி சகாக்களான ஜே.வி.பியினரை அவசர அவசரமாக தமது ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தாம் வெளிநாடு புறப்படுவதற்கு முன்னர் சொற்ப நேரம் அவர்களுடன் கலந்துரையாடல் நாடகம் ஒன்றை நடத்தினார்.

அப்போது என்றுமில்லாதவாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரக் கட்டிப் பிடித்துத் தழுவும் காட்சியைப் படம் பிடிக்கும் அங்கமும் அந்த நாடகம் இடையே அரங்கேறியது.

ஜே.வி.பியின் தலைவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாரி அணைத்து அன்னியோன்னியம் வெளிப்படுத்தும் படங்கள் உடனடியாகவே ஊடகங்களில் வெளியாகின. அதன் மூலம், இணைத் தலைமைகளுக்கும், வெளியுலகுக்கும் - குறிப்பாக மேற்குலகுக்கும் - தாம் தெரியப்படுத்த வேண்டிய செய்தியைத் தெரியப்படுத்திய திருப்தியோடு வெளிநாடு புறப்பட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், உள்நாட்டில்தான் அவர் எதிர்பார்த்தமைக்கு மாறான அரசியல் போக்கு நிகழ்ந்திருக்கின்றது.

அவர் வெளிநாடு புறப்பட முன்னர் யாரை - எந்தக் கட்சியின் தலைவரை - வாரி அணைத்து ஊடகங்களுக் குப் பகிரங்க 'போஸ்' கொடுத்தாரோ, அதே பிரமுகரே - அதே கட்சியின் தலைவரே - ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்புவதற்கு முன்னர் அவரையும், அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பகிரங்கமாக - மேடைகள் தோறும் - வாங்கு வாங்கென்று வாங்கி, திட்டிக் குவித்திருக்கின்றார்.

சொந்தக் காலில் நிற்க முடியாத நொண்டி மிருகம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பாணியில் சுதந்திரக் கட்சியை மோசமாக விமர்சித்து தென்னிலங்கை எங்கும் வைது தள்ளியிருக்கின்றார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. துணிவிருந்தால் தனிக் கட்சியாக நின்று தேர்தலை எதிர்கொண்டு பார்க்கட்டும் சுதந்திரக் கட்சி என்றும் அவர் சவால் விட்டிருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. உறவு மோசமாகச் சீர்கெடும் அளவுக்கு - இரு தரப்புகளுமே மாறி மாறி மேடைக்கு மேடை, அரங்குக்கு அரங்கு திட்டித் தீர்க்கும் அரசியல் அபத்த நாடகம் இப் போது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இவ்வளவு திட்டுக்களையும், அகௌரவக் குறைவான ஏச்சுக்களையும் ஜே.வி.பி. தலைவர்களிடம் வாங்கிக் கட்டிய பின்னரும், அதே ஜே.வி.பிக்குப் பின்னால் வாலைச் சுருட்டிக் கொண்டு - அரசியல் ஆதரவு கோரிக் கொண்டு - மசிந்து செல்வாரா மஹிந்த ராஜபக்ஷ அல்லது சிங்கம் போல சிலிர்த்துக் கொண்டு ஜே.வி.பியு டன் அவர் சீறிப் பாய்வாரா என்பது தெரியவில்லை.

எந்த அணியைத் தம் பக்கத்தில் வளைத்துப் போடுவதற்காக தமிழர் தரப்பைப் பகைத்துக் கொண்டாரோ -

எந்தத் தரப்பின் ஆதரவைப் பெறுவதன் மூலம் தமது நாடாளுமன்றப் பலத்தைப் பெருக்கி, தமது அரசின் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என்ற நப்பாசையில், பௌத்த - சிங்களப் போக்குடைய மேலாண்மைவாதிகளோடு தம்மை அணி சேர்த்துக் கொண்டாரோ -

அந்தத் தரப்பிடமிருந்துதான் அரசியல் ரீதியாக வசைகளை - கண்டனக் கணைகளை - திட்டுக்களை - இப்போது அளவுக்கு அதிகமாக வாங்கிக் கட்டுகின்றார் அவர்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை என்ற சாகரத்தை நீந்திக் கடந்து, நிரந்தரத் தீர்வு என்ற நிலையான இலக்கை, இலங்கைத் தீவு அடைவதற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பில் இருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால், அவர் பதவியேற்ற நாள் முதல் பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் என்ற கல்லைத் தம்முடன் இறுகக் கட்டிக் கொண்டு நிற்பதன் காரணமாக அடைய வேண் டிய இலக்கை நோக்கிய திசையில் நாட்டைக் கொஞ்சம் கூட முன்னேற்ற முடியாமல் - நகர்த்த இயலாது - பிணக்கு என்ற பெரும் சாகரத்துக்குள் முழு நாடுமே அமிழ்ந்தி, பேரழிவைச் சந்திக்கும் ஆபத்தை ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்.

நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு முட்டுக்கட்டையாக - தடையாக - இடைஞ்சலாக - இருக்கும் பேரினவாதத்தை ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளி விட்டு, தீர்வை நோக்கிய சரியான பாதையில் நாட்டை முன்னேற்றுவதற்கு அவருக்கு இப்போது நல்ல வாய்ப்பான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

குழப்பம் பண்ணும் குதர்க்கவாதிகளை - அமைதித் தீர்வை அழிக்க எண்ணும் மேலாண்மைவாதிகளை - ஒரேயடியாகப் புறந்தள்ளக் கிடைத்துள்ள அரியதோர் சந்தர்ப் பம் இது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் 'லடாய்' உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில், அதைப் பயன்படுத்தி, ஜே.வி.பியை ஓரங் கட்டி விட்டு, சுயாதீனமாகச் செயற்பட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வருவாரேயானால் அமைதித் தீர்வுக்கு ஒரு வாய்ப்பு உண்டு என நிச்சயம் நம்பலாம்.

ஆனால், அப்படிச் செய்யும் மனோ பலமும், அரசியல் தைரியமும், திடசங்கற்பமும், பற்றுறுதியும் அவரிடம் உள்ளனவா என்பது கேள்விக்குரியதே!

# குடாநாட்டு உணவகங்களில் மீண்டும் பிட்டு, இடியப்பம்

யாழ்ப்பாணம்.செப்.26

குடாநாட்டு உணவகங்களில் மீண்டும் பிட்டு, இடியப்பம், மற்றும் தோசை, இட்லி ஆகிய உணவுப் பண்டங்கள் நேற்றுக் காணப்பட்டன.

கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக கடந்த சில வாரங்களாக உணவகங்களின் காட்சிப்பெட்டிகள் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன.

இதனால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான உணவகங்களை நாடிச்சென்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இந்நிலையில் - யாழ். மாவட்ட செயலகம் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மாவை தனியார் வர்த்தக நிறுவனங்கள் மூலம், உணவகங்களுக்கு வழங்கியிருந்தது.

இதனையடுத்து, பிட்டு, இடியப்பம், இட்லி போன்ற உணவுகள் உணவகங்களில் நேற்றுக்காணப்பட்டன. பெரும்எண்ணிக்கையானவர்கள் அங்கு உணவு உட்கொண்டதைக் காணமுடிந்தது. (1)

## மண்பரிசோதனை பயிலுநர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு - கிழக்கில் தொழில்நுட்ப சேவையின் மண்பரிசோதனை பயிலுநர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் வே.பொ.பாலசிங்கம் கேட்டுள்ளார். விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தூயகணிதம், பௌதிகவியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் -

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட 4 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அடுத்தமாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பதாரர் பொது அறிவு, தொழில்நுட்ப வினாப்பத்திரம் (கணிதம்) தொழில்நுட்ப வினாப்பத்திரம் (பௌதிக விஞ்ஞானம்) ஆகிய மூன்று பாடங்களில் பரீட்சிக்கப்படுவர்.

வடக்கு - கிழக்கில் மேற்படி பதவி வெற்றிடம் போட்டிப் பரீட்சையின் அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, நியமனம் செய்யப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது. (ப-95)

## தொழில்நுட்ப நிறுவனத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம்.செப்.26

யாழ். உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக, நிறுவனத்தின் ஆங்கிலத்துறைத் தலைவர் வேலுப்பிள்ளை கருணாநிதி நியமனம் செய்யப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். கல்வி அமைச்சின், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

# தியாகி திலீபனின் நினைவுதினம் இன்று



ஈழத்தமிழரின் உரிமைகளுக்கான போராட்டத்தின் ஓர் அம்சமாக காந்தீய வழியில் நீராகாரம் கூட உட்கொள்ளாமல் உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ். அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் தியாகி திலீபனின் 19ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் திலீபன் தனது உண்ணா நோன்பை ஆரம்பித்தார். திலீபனின் அஹிம்சைப் போராட்டத்தின் முடிவில் செப்ரெம்பர் 26ஆம் திகதி திலீபன் தன் கொள்கையிலிருந்து விலகாமல் தன்னுயிர் நீத்துக் காவியமான 19ஆவது நினைவுதினம் இன்றாகும்.

இதனையொட்டி தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் தியாகி திலீபனை நினைவு கூரும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளில் அடையாள உண்ணாவிரதங்கள், சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு தத்தமது பகுதிகளில் கடந்த 15ஆம் திகதி முதல் பொதுமக்கள் நினைவுப்பந்தல்கள் அமைத்து திலீபன் திருவுருவப்படம் வைத்து எழுச்சி கீதமிசைத்து அஞ்சலி செலுத்திவந்தனர். நினைவுதினத்தை ஒட்டி சிரமதானம் போன்ற சமூலநலச் சேவைகளும், இளைய தலைமுறையினரிடையே அறிவுசார் போட்டிகளும் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் அந்தப் பிரதேசங்களில் நடத்தப்பட்டிருந்தன.

**5, 6 இலக்கத்தை முதல் இலக்கமாகக் கொண்டவர்களுக்கு**

# 'சீ.எல்.ஐ.' வசதியுடன் மீண்டும் தொலைபேசி இணைப்பு

கடந்த ஒருமாத காலத்துக்கு மேலாக குடாநாட்டில் செயலிழந்திருக்கும் 5 மற்றும் 6 என்ற இலக்கத்தை முதல் இலக்கமாகக் கொண்ட தொலைபேசி இணைப்புக்கள் வார இறுதிக்குள் இயங்க ஆரம்பிக்கும் என ரெலிக்கொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இணைப்புக்களைச் சீராக்குவதற்கான உபகரணங்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன என்றும்-

அவற்றைப் பொருத்தும் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

புதிதாக வழங்கப்படும் இணைப்புக்கள் 'சீ.எல்.ஐ.' வசதிகளுடன் வழங்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

# பண்டாரநாயக்க தம்பதியரின் சிரார்த்த தின நிகழ்வு இன்று

கொழும்பு,செப். 26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 47 ஆவது சிரார்த்த தினமும் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆறாவது சிரார்த்த தினமும் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றன.

சிரார்த்த தின நிகழ்வுகள் இன்று காலை 7.40 மணிக்க ஹொரகொல்லவிலுள்ள பண்டாரநாயக்க தம்பதிகளின் சமாதிக்கு அருகில் இடம்பெறவுள்ளன. ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க லண்டனில் தங்கியிருப்பதால் இன்றைய நிகழ்வுகளில் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிகிறது. இன்றைய சிரார்த்த நிகழ்வையொட்டி கம்பஹா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. (த)

## தீவகப் பாடசாலையில் நியமனம் பெற்றோரை கடமையேற்கப் பணிப்பு

கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறி தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றவர்களை சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார்.

# சு.க.-ஜே.வி.பி. லடாய் மிக உச்சக் கட்டத்தில்!

**இருதரப்பு உறவு ஒரேயடியாக முறியும் சாத்தியம்**

கொழும்பு,செப்.26

ஸ்ரீல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான மோதல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உக்கிரமடைந்து வருகின்றன. ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கடந்த வாரம் பொலன்னறுவையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஸ்ரீல.சு.கட்சி மிக மோசமாக சாடியிருக்கிறார்.

வீதியில் வருவோரை ஏற்றிக் செல்லும் பழங்காலத் தொழிலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செய்கிறது என்று அங்கு பகிரங்கமாகக் குறிப்பிட்டதன் மூலம் அக்கட்சி விபசாரி வேலையை புரிகின்றது என்ற சாரப்பட அவர் தாக்கிப் பேசியிருக்கின்றார்.

இக் கூற்று ஸ்ரீல.சு.கட்சி முக்கியஸ்தர்களை சீற்றம் கொள்ளச் செய்துள்ளது.

சு.கட்சிக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுகள் குறித்தே சோமவன்ஸ அமரசிங்க இவ்வாறு சு.கட்சியை விபசாரிக்கு ஒப்பிட்டு கடுமையாக விமர்சித்துள்ளார் - என்று கருதப்படுகிறத.

இதேவேளை, தொழிற்சங்கங்கள் [illegible] வகையில் வர்த்தமானி அறிவித்தலொன்றை அரசு வெளியிட்டிருந்தது. இதன் கீழ் சுகாதார சேவை, எரிபொருள் விநியோகம், மின்சாரம், வங்கிச்சேவை உட்பட மேலும் சில சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இது குறித்தும் ஜே.வி.பி. அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் அரசின் இந்த நடவடிக்கைக்காக இனிவரும் காலங்களில் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணைக்கு எதிராகத் தான் வாக்களிக்கப் போவதாக எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

சோமவன்ஸ அமரசிங்கவின் கூற்றை எதிர்த்து ஸ்ரீல.சு.கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான அநுர பண்டாரநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்து விட்டனர். இந்த நிலையில், தற்போது நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியினரின் போக்குக் குறித்து அதிருப்தியுற்றிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. ஜே.வி.பியினரை அரசுடன் இணையும்படி அவர் இனிமேலும் கோரிக்கை விடுக்கமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.,

அத்துடன், ஏற்கனவே ஜே.வி.பி., ஸ்ரீல.சு.கட்சிக்கு முன்வைத்துள்ள இருபது கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகளை சு.க. ஏற்றுக்கொள்ளவில்லை.

சமாதான முன்னெடுப்புகளுக்கு நோர்வேயின் அனுசரணை பெறக் கூடாது, வடக்கு - கிழக்கை பிரிக்க வேண்டும், யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யவேண்டும் ஆகியனவே அந்த மூன்று கோரிக்கைகளாகும். இதற்கும் மேலாக இப்போது புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு வந்தால் மட்டுமே அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் எனவும் ஜே.வி.பி. தெரிவிக்கின்றது.

இவ்விடயங்களில் சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்ளும் ஜே.வி.பியின் இந்த நிபந்தனைகளை எப்படியும் அரசு ஏற்றுக்கொள்ளாது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். இந்த நிலையில் அரசுடன் ஜே.வி.பி. இணையும் வாய்ப்பு அறவே இல்லை எனவும் இருதரப்பு உறவுகள் ஒரேயடியாக முறியும் சாத்தியமே தென்படுவதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான சுரேஸ்குமாரின் மைத்துனரும் இலங்கை வங்கி 2ஆவது கிளையின் முகாமையாளருமாகிய

**இராஜசிங்கம் சிவராமலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் துன்பமும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியரும்.

LANKA CLEAR
NATIONAL CHEQUE CLEARING HOUSE
BOC, 2nd BRANCH BUILDING, JAFFNA. (சி-51045)

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்புக்குரிய முகாமையாளரும், அண்மையில் பிரதேச முகாமையாளராக பதவி உயர்வு பெற்றவருமான

**இராஜசிங்கம் சிவராமலிங்கம்**

அவர்களது மறைவையிட்டு நாம் ஆறாத் துயரடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா இறைவன் பாதங்களையடைய வேண்டி நிற்கின்றோம்.

இலங்கை வங்கி
இரண்டாம் கிளை ஊழியர்கள்.

(சி-51046)

## கண்ணீர் அஞ்சலி

எமது காரியாலய ஊழியர் திரு.வி.திருவிளங்கம் அவர்களின் புத்திரன்

**திருவிளங்கம் கஜேந்திரன்**

அவர்கள் 13.08.2006 அன்று அகாலமரணமடைந்த செய்தியறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த மனவருத்தத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை,
வட பிராந்திய தொழிற்சங்கம் யாழ்ப்பாணம்.

(53899)

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

6ஆம் ஆண்டு



திருமதி
சுந்தர் சேதுப்பிள்ளை

8ஆம் ஆண்டு



திருமதி
மயில்வாகனம் றெஜீனா

14.07.1916 பிறப்பு 18.08.1946
26.09.2000 இறப்பு 03.10.1998

என்றும் எம் நினைவில்...

அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 211, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (53888)
குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## பிறந்த நாள் நினைவும் நன்றி நவிலலும்

மண்ணக வாழ்வு 26 . 09 . 1983



விண்ணக வாழ்வு 12 . 08 . 2006

**செல்வி அன்ரனிற்றா அன்ரனியூஸ்**

*மண்ணக வாழ்வு மாயை என்று எண்ணி*
*விண்ணக வாழ்வை விருப்புடன் தேடிச்சென்ற*
*செல்வி அன்ரனிற்றா அன்ரனியூஸ் அவர்களின்*

23 ஆவது பிறந்த நன்நாளை ஈர விழிகளுடன் அன்னாரின் பெற்றார், உறவினர், நண்பர்கள் நினைவு கூரும் இன்றைய நாளில் அவரின் ஆன்மா நித்திய சாந்தியடைந்து புனிதர்களின் தோழமையில் நிலைத்து வாழ செபத்தில் ஒன்றித்திருக்கின்றோம்.

அத்துடன் எமது மகள் நோயுற்ற காலங்களில் மருத்துவ தேவைகளுக்கு உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கும், மேலும் இக்கட்டான சூழ்நிலையிலும் இறுதிக் கிரியைகளை நல்ல முறையில் நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எமது துன்ப வேளையில் எமக்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருந்து இறுதி நிகழ்விலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரி வீதி, இளவாலை. (53884)

பெற்றோர்
திரு. திருமதி அன்ரனியூஸ்.

## கிராம அலுவலரின் உறுதிச்சீட்டு தேவை

தற்சமயம் ப.நோ.கூ.சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படும் பங்கீட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள 'அ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் தத்தமது பகுதிக் கிராம உத்தியோகத்தர்களிடம் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான உறுதிச்சீட்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும்-

கிராம உத்தியோகத்தர்கள் வழங்கும் உறுதிச்சீட்டுடன் வருபவர்களுக்கு மட்டுமே பொருள்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருள் கள் தற்சமயம் 'அ', 'உ' அட்டைகளுக்கு பணத்திற்கு வழங்கப்படுவது தெரிந்ததே. (ப-111)

## தீவகம் செல்வதற்கு நேற்றும் அனுமதியில்லை

கடந்த இரு வாரங்களில் மூன்றாவது தடவையாக நேற்றும் தீவகம் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. தீவகப் பகுதியில் இடம்பெற்றுவரும் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புகளையடுத்தே படையினர் பண்ணையூடான பயணத்திற்கு அனுமதிக்கவில்லை.

இதனால் சத்திரச் சந்தியில் தீவகத்திற்குச் செல்லத் தயாராக இருந்த வாகனங்கள் மற்றும் அரசாங்க அலுவலர்கள், அதிகாரிகள் பயணம் கடந்த இரு வாரத்தில் மூன்றாவது தடவையாகத் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-95-111)

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.10.2006 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விலையை 36 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாக விலையை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பொது முகாமையாளர்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## தவறிவிட்டது

புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயில் வசிக்கும்நவரத்தினம் சாம்பசிவம் என்பவரது NIC No:-540462259X இலக்கமுடைய தே.அ. அட்டை கடந்த 24.08.2006 இல் நவாலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## நாய்க்குட்டி விற்பனைக்கு

6மாத காலம் நிரம்பிய சகல தடுப்பூசியும் ஏற்றப்பட்ட கிறைற்டேன் (ஆண்) நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
இல.46, ஆசிர்வாதம் லேன்,
யாழ்ப்பாணம்.

## தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் கோயில்
## ஸ்ரீ கேதார கௌரி நோன்பு

ஆரம்பம்:- 02.10.2006 திங்கட்கிழமை
பூர்த்தி :- 21.10.2006 சனிக்கிழமை

தினமும்:- முற்பகல் 11 மணி அபிஷேகம்
மதியம் 12 மணி சங்கற்பம்
12.30 மணி விரத வழிபாடு
1.30 பிரதஷண நமஸ்காரம்

மேற்படி விரதம் அனுஷ்டிக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தங்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா (ரவிஐயா)
ஆதீனகர்த்தா.

(53911)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மலராக மடியில்* 10 . 01 . 1994



*மழலையாக மண்ணில்* 21 . 09 . 2005

செல்வன் ஆழ்வாப்பிள்ளை பரமநாதன்
திதி: 26.09.2006

காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமென
கண்டிருந்த கனவுகளை கலைத்து விட்டு
கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எம்
கண்ணீர் காற்றில் கரைந்ததேனோ?

கரவெட்டி தெற்கு, நெல்லியடி. (53917)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராதேவி வேதராஜா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான திருமதி இந்திராதேவி வேதராஜா 23.09.2006 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வேதராஜாவின் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அன்பு மனைவியும் சுமதி (லண்டன்), சதீஸ்குமார் (கொழும்பு), ராஜேஷ்குமார் (லண்டன்), சுதாமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ராஜ்குமார் (லண்டன்), அனுஷா (கொழும்பு), சுரேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தரன், சுஜி, சிந்திஜா, டிலக்ஷி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.09.2006 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கொழும்பு. (53908) **வே.சதீஸ்குமார் (மகன்)**

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் மாணிக்கம்



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மாணிக்கம் அவர்கள் 22.09.2006 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் தண்மணி, சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் படிகலிங்கம் (பொறியியலாளர் U.K), அமரர் மாணிக்கலிங்கம் (மரக் கூட்டுத் தாபன பொறுப்பாளர்), இரத்தினலிங்கம் (பிரான்ஸ்), கனகேஸ்வரி (பிரான்ஸ்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, நிர்மலேஸ்வரி, பஞ்சலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவசக்தி (U.K), இந்திராணி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தேவராஜா, நவநாதன், ஜெயந்திரா, வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் Dr. உமா-நிறேஷ், தர்மினி, குமரேஷ், ஜெனி - சுரேஷ், ஜெரா - கண்ணன், ஜூலி, ஜீசல், சரணியா, மதீவன், சஞ்ஜீவன், மிதர்சன், தக்ஷாமினி, நிரோசன், மிதுன்ராஜ், வினோத்ராஜ், அருண்ராஜ், சரண்ராஜ், டிலாஞ்சினி, ஹபீசன், பிரகாஷ், பிரவீணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செலீனா, சஞ்சய், சஜித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். T.P. 222 3851

தகவல்:
**சோ.நவநாதன், பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் உயர்கல்வி கற்பதற்கு இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு

## புதிய தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.26

இலங்கை மாணவர்கள் அமெரிக்காவில் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படவுள்ளன என இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ரொபேட் ஒவ்லே தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இயங்கும் கல்வி நிலையங்கள் தொடர்பான விடயங்களை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பெறமுடியும் என்று தெரிவித்த அவர், மாணவர்களுக்கு அமெரிக்க அரசு வழங்கும் நிதியுதவி தொடர்பான விடயங்களையும் அங்கு அறிந்து கொள்ள முடியுமென்று மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவில் செயற்படும் பிரசித்தி பெற்ற 15 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் அமெரிக்கக் கல்வி நிலையங்களில் கல்வி கற்க ஈடுபாடுள்ள இலங்கை மாணவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளனர் என்றும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது. (க)

# தென்மராட்சி கிழக்கில் உயிரிழந்த ஐவரின் சடலங்கள் முறைப்படி அடக்கம்

தென்மராட்சி,செப்.26

கடந்த மாதம் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பலியான ஐந்து பேரின் சடலங்கள் கடந்த சனிக்கிழமை மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் மயானங்களில் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான், யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.பாலசுப்பிரமணியம், கிராம அலுவலர்கள் ஆகியோரின் முன்னிலையில் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 13ஆம் திகதி கொடிகாமம் ஆத்திசூடி வீதி வழியாக வந்தபோது துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான இதே இடத்தைச் சேர்ந்த இராசையா திஷிஷன் (வயது 21) என்பவரினதும் -

ஓகஸ்ட் 14ஆம் திகதி கொடிகாமம், கச்சாய் வீதியில் தங்கியிருந்த வேளையில் வீட்டினுள் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பலியான விடத்தற்பளையைச் சேர்ந்த கோபாலசிங்கம் பாலகுமார் (வயது 19), இவரது சகோதரியின் மகளான மகேந்திரன் மனோரதி (வயது 21) இவ்வீட்டில் பாதுகாப்புக்கு குசினி புகைக்கட்டுக்குக் கீழ் மறைந்திருந்த நகுலேஸ்வரன் நகுலேஸ்வரி (வயது 13) ஆகியோரினதும் -

ஓகஸ்ட் 15ஆம் திகதி கொடிகாமம், தவசிகுளம் பகுதியில் வீட்டு முற்றத்தில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பலியான அதே இடத்தைச் சேர்ந்த லெணாட் பிலிப்யோசப் (வயது 48) என்பவரினதும் சடலங்களே இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்டவையாகும்.

கொடிகாமம் கச்சாய் வீதியில் வீடொன்றின் அருகில் புதைக்கப்பட்ட இரு சடலங்களும், பாலாவி தாழ் மயானத்தில் புதைக்கப்பட்ட இரு சடலங்களும் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் அதே மயானத்திலும்,

பாலாவி ஈச்சங்காடு மயானத்தில் புதைக்கப்பட்ட யோசப் என்பவரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் அதே மயானத்திலும் உறவினர்களின் வேண்டுகோளின்படி அடக்கம் செய்யப்பட்டன.

# இழுத்துவரப்பட்ட வாகனங்கள் உரியவர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

கடந்த மாதம் முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஷெல்வீச்சுக்களால் சேதமடைந்த லொறிகளை முகமாலையில் இருந்து பொலிஸாரும் படையினரும் மீட்டுவந்து கொடிகாமம் பகுதியில் வைத்து வாகன உரிமையாளர்களிடம் கையளித்தனர்.

மீட்கப்பட்ட வாகனங்கள் குறித்து பொலிஸாரால் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டு, நீதிமன்ற ஆணைப்படி உரியவர்களிடம் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 17 பார ஊர்திகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் லொறி உரிமையாளர்களை பொலிஸார் மூன்று பேர் வீதம் லொறி சேதமடைந்த பகுதிக்குக் கூட்டிச்சென்று லொறிகளைப் பார்வையிட அனுமதிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-31)

# கோழித்தீவனம் இன்றி பண்ணையாளர் சிரமம்

அரியாலை,செப்.26

குடாநாட்டில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டிருப்போர் அதற்குரிய தீவனம் இன்றி பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோழிகளுக்குரிய தீவனத்தின் கையிருப்பு முடிவடைந்ததையடுத்து உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் தீவனங்களே கோழிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக கோழிப் பண்ணையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் தீவனமும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், அவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கோழிகளுக்குரிய தீவனத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதையடுத்து கோழிவளர்ப்போர் முட்டையிடும் கோழிகளை இறைச்சிக்கு விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இதனால், கோழி முட்டை ஒன்று 10 ரூபா முதல் 15 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (17)

# கால்நடைகளுக்கான தீவனத்தை கப்பலில் எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

கால்நடைகளுக்கான தீவனங்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (வடக்கு) விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்:

குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் கால்நிலை களுக்கான கோழித்தீவனம், கறவைப்பசுத் தீவனம் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் கால் நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இந்நிலையில் மேற்படி தீவனங்களைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு அரச அதிபர் மூம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தீவனங்களை பெரும்பாலும் அடுத்தமாத முற்பகுதியில் இங்கு பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

எனவே, கால்நடை வளர்ப்போர் தத்தம் பிரதேச கால்நடை [illegible] களில் தமது பதிவினை மேற்கொள்ள முடியும்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தம்பாட்டிக் கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சம்

மண்டைதீவு,செப்.26

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வரட்சி, போக்கு வரத்துப் பிரச்சினை போன்ற பல காரணங்களால் தீவுப் பகுதியில் உள்ள தம்பாட்டிக் கிராம மக்கள் தண்ணீர் பஞ்சத்தால் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் உள்ள பாடசாலையில் கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர்கள் போக்கு வரத்து சிரமத்தின் மத்தியில் குடி நீரையும் தம்முடன் எடுத்துவர வேண்டிய கட்டாய நிலையில் இருப்பதாக அதிபர் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களாக சாட்டியில் இருந்து பௌசர் மூலம் எடுத்துவரப்பட்ட குடிதண்ணீர் சேவை எரிபொருள், போக்கு வரத்து, சுற்றிவளைப்பு போன்ற மற்றும் பல காரணங்களால் தடைப்பட்டுள்ளதாகவும் -

கல்வித் திணைக்களத்தால் இந்தப் பாடசாலைக்கு தினமும் வழங்க ஒழுங்கு செய்யப்பட்ட 300 லீற்றர் குடிதண்ணீர் விநியோகம் ஊழியர்களின் பாதுகாப்பு காரணங்களால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்களின் வரவின்மையால் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களை பாதுகாத்து வைப்பதற்கு அபிவிருத்திச் சங்கத்தினர் கஷ்டப்படுவதாகவும் போதிய களஞ்சிய அறைகள் இல்லையென்றும் அயற்பாடசாலையான நாரந்தனை றோ.க. போன்ற பாடசாலையில் மதிய உணவுப் பொருள்கள் திருட்டுப்போன காரணத்தினால் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ப-88)

# வெளிவாரிப் பரீட்சையின் பெறுபேறு வெளியாகியது

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பரீட்சைகள் அலகினால் இந்த வருடம் நடத்தப்பட்ட நுண்கலைமாணி (சங்கீதம்/ நடனம்) முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் 4ஆம் வருட பரீட்சைகளின் பெறுபேறுகள் நேற்று திங்கட்கிழமை வெளியாகியுள்ளன.

நுண்கலைமாணி - 2001 பட்டம் பெறுவோர் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. பட்டியலில் பெயர், விவரங்களை மாணவர்கள் வெளிவாரிப்பட்ட பரீட்சைகள் அலகின் அலுவலகத்தில் பார்வையிடலாம் என்று உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகர் அறிவித்துள்ளார். (202)

# சிற்றுண்டிக் கடைகளில் அவித்த மரவள்ளிக் கிழங்கு

வடமராட்சிப் பகுதி உணவகங்களில் சிற்றுண்டிகளுக்குப் பதிலாக அவித்த மரவள்ளிக் கிழங்கு உணவாக வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழலில் சிற்றுண்டி தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றமையாலும் சில கடைகளில் கிடைக்கும் பொருள்களை அதிக விலைக்குக் கொள்வனவு செய்யவேண்டியுள்ளதாலும் உணவக உரிமையாளர்கள் உள்ளூர்ச் சந்தைகளில் பெறக் கூடிய மரவள்ளிக் கிழங்கை மாத்திரம் தமது கடைகளில் வழங்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை-

தேநீர் தயாரிக்கும் மூலப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதனால் பனை வெல்லத்துடனும் ரொபிகளுடனும் தேநீர் வழங்கப்படுவதனையும் காணமுடிகின்றது. (ப-ரி)


# யாழ். மாநகரசபை

## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

*கீழ் குறிப்பிட்ட வீதி வேலைக்காக யாழ். மாநகரசபையில் பதிவு செய்துள்ள இக்ராட் பதிவைக் கொண்டுள்ளதுடன் வற் வரி செலுத்தும் ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.*

*கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் திகதி : 27.09.2006 இருந்து 05.10.2006 பிற்பகல் 3.00 மணிவரை*

*கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 09.10.2006 நண்பகல் 12 மணிவரை*

*கேள்வி திறக்கப்படும் திகதி: 10.10.2006 காலை 10.30 மணிக்கு.*

*பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் 'வீதி செப்பனிடுவதற்கான கேள்வி' என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ் வேலைக்கு தேவையான தாரினை ஒப்பந்ததாரரே தருவித்துப் பயன்படுத்த வேண்டும்.*

*மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டு வரும் வீதி வேலைப் பகுதியில் அறிந்து கொள்ளமுடியும்.*

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த இக்ராட். பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணம் (ரூபா) | மீளளிக்க முடியாத கேள்விவைப்பு பணம் வற்வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | ஆத்தியடி குறுக்கு வீதி | M9 | 4050/- | 575/- |
| 02. | கற்குளம் 4ஆம் ஒழுங்கை | M9 | 2250/- | 575/- |
| 03. | மாநகர சபை உள்ளக வீதி | M6 | 1720/- | 575/- |
| 04. | பிளச்சஸ் வீதி | M9 | 5250/- | 575/- |
| 05. | செட்டி வீதி மதகு | M9 | 7500/- | 575/- |
| 06. | மீனாட்சி அம்மன் வீதி | M9 | 7500/- | 575/- |
| 07. | சட்டநாதர் வீதி | M9 | 4500/- | 575/- |
| 08. | மார்ட்மன் ஒழுங்கை | M9 | 3750/- | 575/- |
| 09. | ரட்ணம் அவன்யூ | M9 | 3750/- | 575/- |
| 10. | அரச வீதி | M9 | 610/- | 575/- |
| 11. | விதானையார் வீதி கொழும்புத்துறை | M9 | 6000/- | 575/- |
| 12. | யாழ். வீதி | M9 | 7500/- | 575/- |
| 13. | C. பொன்னம்பலம் வீதி | M9 | 7500/- | 575/- |
| 14. | இந்து மகளிர் கல்லூரி 5ஆம் ஒழுங்கை | M9 | 2250/- | 575/- |
| 15. | சாஸ்திரியார் வீதி | M9 | 6000/- | 575/- |
| 16. | முத்தமிழ் வீதி | M9 | 4500/- | 575/- |
| 17. | முனீஸ்வரன் வீதி | M9 | 6000/- | 575/- |
| 18. | றக்கா வீதி | M9 | 7500/- | 575/- |
| 19. | கலைப்புலவர் வீதி | M9 | 4500/- | 575/- |
| 20. | சந்தனமாதா கோவில் 2ஆம் ஒழுங்கை | M9 | 4500/- | 575/- |
| 21. | புரணங்குளம் தொடர் வேலை | M9 | 6000/- | 575/- |
| 22. | பிறவுண் வீதி 5ஆம் ஒழுங்கை | M9 | 6000/- | 575/- |
| 23. | பருத்தித்துறை வீதி சட்டநாதர் வீதி முன்பக்க ஒழுங்கை | M9 | 3375/- | 575/- |
| 24. | புனித செபஸ்தியான் வீதி தொடர் வேலை | M9 | 2625/- | 575/- |
| 25. | இராசாவின் தோட்டம் உப ஒழுங்கை | M9 | 10500/- | 575/- |
| 26. | ஆசீர்வாதப்பர் வீதி | M9 | 3000/- | 575/- |
| 27. | பூமகள் வீதி | M9 | 3000/- | 575/- |

குறிப்பு: 1. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்வி சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.
2. வேலைகள் யாவும் 15.10.2006ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதுடன் 30.11.2006ஆம் திகதி நிறைவுறுத்தி ஒப்படைக்க வேண்டும்.

(அ-31039)

எம்.எஸ். சரவணபவ
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் விய வருஷம் புரட்டாதி மாதம் தமிழ் முதலாம் திகதி (17.09.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆயக்கடவையானின் திருப்பாதமடைந்த

### பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் பாலகிருஷ்ணசர்மா

(குஞ்சுக்கிளி ஐயா)

(புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பரம்பரை குருவும், இளைப்பாறிய இ.போ.ச., பிரதி முகாமையாளர், கோண்டாவில்)

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் (மதியபோசனம்) கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தசாகம் (கல்லெடுப்பு) 29.09.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிருஹயக்ஞம் (மதியபோசனம்).

**ஆயக்கடவை சித்திவிநாயகர் கோயில், புன்னாலைக்கட்டுவன்.**

தகவல்: **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி 2ஆவது கிளையின் முகாமையாளராகிய

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் துன்பமும் கவலையும் அடைகின்றோம்.அன்னாரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருள் விநாயகர் ரேடர்ஸ்**
*108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

## 45ஆம் நாள் நினைவுப்பிரார்த்தனை

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமூகசேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **வேலாயுதன் சிவராஜா** அவர்களின் பாசமிகு சகோதரர்

### வேலாயுதன் ஜெனற்ராஜ்

வரணியில் அகாலமரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்த நாம், அவரது பிரிவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினரது துயரிலும் பங்குகொள்கின்றோம்.

**உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.**

நலன்புரிச்சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

**(முகாமையாளர் இலங்கைவங்கி 2ஆம் கிளை யாழ்ப்பாணம்)**



24.09.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த இ.சிவராமலிங்கம் அவர்களின் பிரிவால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

(53925)

முகாமையாளரும், ஊழியர்களும்,
இலங்கை வங்கி, காங்கேசன்துறை.

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் ***செல்வி. தர்ம சாந்தினி மயில்வாகனம்*** அவர்களின் பாசமிகு தந்தை

### செல்லத்துரை மயில்வாகனம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.**

(53924)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரட்ணம் கனகம்மா

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இராஜவீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் கனகம்மா நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும், விஸ்வநாதரின் மருமகளும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகரத்தினம், நல்லம்மா, நல்லதம்பி, மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாநிதிதேவி (புங்குடுதீவு), ரேவதி (சுவிஸ்), ரதி (யாழ்ப்பாணம்) செல்வரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கனகானந்தசிவம் மற்றும் ராஜன், அமலன், ராகினி ஆகியோரின் அன்பு மாமியும் அரவிந்தன், அமுதா, அகிலா (சுவிஸ்), அஜந்தன், அனுஷா, அனித்தா (புங்குடுதீவு) எழில், இலக்கி (சுவிஸ்) தர்ஷன், நிரோஜன், கிருஷ்ணகௌரி (யாழ்ப்பாணம்), அபிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜவீதி, கல்வியங்காடு, (கோப்பாய் பொலீஸ் நிலையம் அருகில்).**

தகவல்: **ரதி (மகள்) ஈசன் (மருமகன்).**

## தெனியாய பகுதியில் 12 தமிழர்கள் கைது

தெனியாய பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கை யின்போது தமிழ் இளைஞர்கள் 12 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர். தெனியாய பொலிஸ் பிரிவிலுள்ள அனில் கந்த என்ற இடத்தில் வைத்து இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தெனியாய பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இந்த இளைஞர்கள் புலிகள் இயக்கத்தினருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்திருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகவும், இவர்கள் அடிக்கடி வடக்கிற்குச் சென்று வந்திருக்கின்றனர் என பொலிஸார் கூறுகின்றனர்.

இவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என தெனியாய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி லக்ஷமன் ரஞ்சித் தெரிவித்தார். (த)

## சுற்றறிக்கை வரவில்லை அதனால் நிவாரணம் தாமதம்

பருத்தித்துறை, செப்.26

பருத்தித்துறைப் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக 'உ' அட்டைகளுக்கான பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதுடன் 'அ' அட்டை உள்ளவர்களுக்கும் சமுர்த்தி நிவாரணம் மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணங்களும் இதுவரையில் வழங்கப்படாமையால் மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக புலோலி ப.நோ.கூ.ச. பொது முகாமையாளரிடம் கேட்டபோது தமக்கு இதுவரையிலும் சமுர்த்தி மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கான சுற்றுநிருபம் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கிடைத்ததும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (ப-ரி)

## இரங்கலுரை நிகழ்த்துகையில் மயங்கிவீழ்ந்து மரணம்

நீர்வேலி.செப்.26

நீர்வேலி காளியம்மன் கோயிலடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மரணச்சடங்கில் கலந்துகொண்டவர் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

மேற்படி மரணச்சடங்கில் இரங்கலுரை நிகழ்த்திக் கொண்டிருந்த காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தலைவர் சின்னத்துரை அருந்தவநாதன் என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

இதையறிந்து மேலும் மூவர் மயங்கி வீழ்ந்து சிறிது நேரத்தின் பின்னர் சுயநிலை அடைந்துள்ளனர். (ப-110)

## தனியார் கடைகளில் கோதுமை மா விற்பனை

அரியாலை.செப்.26

யாழ்.நகரில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் சிலவற்றிலும் நேற்று கோதுமை மா பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பங்கீட்டு அட்டையைக் காட்டி பெரும் எண்ணிக்கையான மக்கள் வரிசையில் நின்று கோதுமை மாவைப் பெற்றுக்கொண்டனர். (17)

## முகமாலையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டோரை சமுகமளிக்குமாறு பணிப்பு

அரியாலை.செப்.26

முகமாலையில் முன்னர் பொருள்களை வாகனங்களில் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களை இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு தவறாது சமுகம் தருமாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் சி.தேவக்குமார் கேட்டுள்ளார். (17)

## கப்பல் மூலம் வெங்காயத்தை தெற்கே எடுத்துச் செல்ல உதவுக! விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.26

யாழ்.மாவட்டத்தில் தேவைக்கு அதிகமாகவுள்ள வெங்காயத்தை கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்புவதற்கு உதவி செய்ய வேண்டும் என மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மிகையாகவுள்ள வெங்காயத்தை கப்பல் கட்டணமின்றி கொழும்புக்கு அனுப்பி விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். யாழ். மாவட்டத்தில் நல்ல தரமான வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு சந்தை வசதி இல்லாத காரணத்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்திற்கு நியாயமான சந்தை வசதி ஏற்படுத்தி கொடுத்து உதவ வேண்டும் என சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க முதலியார் கேட்டுள்ளார். (ப- 95)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு செல்லப்பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியர்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், துன்னாலை மத்தி செல்லமகாலை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு செல்லப்பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும், சி.பத்மாவதி, ர.கருணாவதி (பிரதேச செயலகம், பருத்தித்துறை), செ.விமலநாதன் B.A.(லண்டன்), இ.மதனாவதி ஆசிரியை (சுவிஸ்), அ.சுலோசனாவதி ஆசிரியை (லண்டன்), க. தில்லைநாயகி ஆசிரியை (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.சிவயோகநாதன் (முன்னாள் பொது முகாமையாளர்), நா.ரவிச்சந்திரன் (மேற்பார்வையாளர்), டாக்டர் வி. கிருஷ்ணவேணி (லண்டன்), சி. இராசேந்திரநாதன் (சுவிஸ்), சி. அருணாசலம் (லண்டன்), கி.கமலதாசன் (உரிமையாளர் ரவி வோச் வேக்ஸ் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செல்லமகால்' துன்னாலை மத்தி, கரவெட்டி.*

*தகவல்:* **குடும்பத்தினர். த.சிவயோகநாதன் (மருமகன்)**

### திருமதி மீனாட்சியம்மா வல்லிபுரம்

வதிரி, திருவள்ளுவரகத்தைச் சேர்ந்த மீனாட்சியம்மா நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சைவப்புலவர் சி.வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திகலவதி இரத்தினசபாபதி, சரச்சந்திரா (லண்டன்), தயானந்தா (கிராம அலுவலர்), யோகேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஆ.இரத்தின சபாபதி (அதிபர்), வசந்தரா சரச்சந்திரா, மதிவதனா தயானந்தா, சுமதி யோகேந்திரா ஆகியோரின் அன்பு மாமியும் தங்கச்சிப்பிள்ளை சுப்பிரமணியம், சுபத்திரை இளையையா, தனபாலசிங்கம், மருத்துவர் தங்கராசா (பரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருவள்ளுவரகம், வதிரி.*

*தகவல்:* **வ.தயானந்தா**

### திருமதி ரத்தினம் ஞானம்மா



யாழ்ப்பாணம் இல. 54, றக்கா வீதியைச் சேர்ந்த திருமதி ரத்தினம் ஞானம்மா நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தமேந்திரா, குணநாயகம் **(R.G Stores)** மற்றும் கிறிஸ்டி (பிரான்ஸ்), யேசுதாசன், வசந்தன், இன்பநாதன், மின்னோ, ரேமானி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் விஜயா, டக்ளி, வசந்தா, நிம்மி, சாமன் காலஞ்சென்ற பவுளிஸ், பீற்றர், குணா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.54, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:* **விஜயா குணநாயகம், (R.G. Stores).**

### அருளம்பலம் சச்சிதானந்தமூர்த்தி



கொட்டடியை பிறப்பிடமாகவும் நாவற்குழி சந்தி நாவற்குழியை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் சச்சிதானந்தமூர்த்தி நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தமிழ்செல்வி, ஜானகி, சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புண்ணியமூர்த்தி (கோப்பாய்), சிவமூர்த்தி (வவுனியா), காலஞ்சென்ற கதிர்காமமூர்த்தி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐந்து வீட்டுத்திட்டம், நாவற்குழி சந்தி, நாவற்குழி.*

(53923)

*தகவல்:* **குடும்பத்தினர்.**

### திருமதி பாலரஜனி நித்தியானந்தன்

சங்குவேலி வடக்கைச்சேர்ந்த பாலரஜனி நித்தியானந்தன் நேற்று (25.09.2006) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் நாகரட்ணம் - ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், நித்தியானந்தனின் அன்பு மனைவியும் நிஷா, ஜங்கழி, யது ஆகியோரின் பாசமிகு தாயும், உதயகுமார், ஜெயக்குமார், பாலரஞ்சினி, சிவகுமார், பாலரதி, பாலரூபி, பாலசக்தி, பாலசுதர்சினி, பாலயோகினி, பாலசையிலா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்திற்கு நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு, சங்குவேலி, மானிப்பாய்.*

தகவல் **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு நண்பகலுக்குப் பின்னரே படகுச் சேவை

### துறைமுகப் பகுதியில் சேறு அகற்றப்படாமையே காரணமாம்!

யாழ்ப்பாணம்,செப். 26

நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச் சேவை தற்சமயம் தினமும் நண்பகல் 12 மணிக்கு பின்னரே இடம்பெறுகின்றது.

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் உள்ள கடல் நீர் காலைவேளைகளில் படகுகள் மிதக்க முடியாத அளவுக்கு வற்றி விடுவதாகவும் -

இதனால் அங்கிருந்து காலை 7 மணிக்குக் குறிகாட்டுவான் நோக்கிப் புறப்படவேண்டிய் பயணிகள் படகு குறிப்பிட்ட நேரத்திற்குப் புறப்படமுடியுயாமல் காலம் தாழ்த்தியே புறப்பட வேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதனால் காலை நெடுந்தீவில் இருந்து யாழ். நகருக்கு தமது அலுவல்கள் காரணமாக வரும் மக்கள் மீண்டும் மறுதினமே தமது இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் துறைமுகத்துள் கடல் நீர் வற்றும்போது அங்கு தேங்கிக்கிடக்கும் சேறு அப்புறப்படுத்தப்பட்டு வந்தது. தற்சமயம் அது இடம்பெறாமையால் படகினை காலம் தாழ்த்தி புறப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (113)

# ஊரடங்கு வேளையில் கொள்ளையிட முயன்றவர்களை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி துரத்திய படையினர்

### கொடிகாமம் எருவன் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்.செப்.26

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள வேளையில் கொள்ளையில் ஈடுபட்டவர்களை அப்பகுதியில் கடமையிலிருந்த படையினர் கண்டு துரத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கொடிகாமம் எருவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு 8 மணிக்கு இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டிற்குள் சென்ற குழுவினர், அவரது பெயரைச்சொல்லி அழைத்துள்ளனர். குரல் கேட்டு வீட்டிலிருந்த பெண், ''சார்ஜர்'' வெளிச்சத்துடன் வெளியே வந்தபோது ஆறு பேர் வாள்கள், கத்திகளுடன் நிற்பதைக்கண்டு பலமாக சத்தமிட்டுள்ளார்.

அவ்வேளை நாய்கள் திருடர்களைக் கடிக்க வந்தபோது அவர்களில் ஒருவர் வாளினால் நாயைவெட்டிக் - காயப்படுத்தியதாகவும் -

பெண்ணின் கூக்குரல் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தபோது அங்கிருந்து திருடர்கள் தப்பியோடி வீதிக்கு வந்தனர் என்றும் -

அந்தச் சமயம் அங்கு கடமையில் நின்ற படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த ஒருவரை படையினர் பிடித்துச் சென்றுள்ளதாகவும் காயமடைந்த மற்றொருவரை அவருடன் வந்தவர்கள் தூக்கிச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நவராத்திரி நிகழ்வுகள்

வலி.தென்மேற்கு,செப்.26

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் காலை மாலை வேளைகளில் பூசை வழிபாடுகள் நடைபெற்று, ஒன்பதாவது நாள் மகிடாசுர சங்காரமும், 10 ஆவது நாள் மானம்பூ திருவிழாவும் நடைபெறவுள்ளன. (135)

* * *

வலி.தென்மேற்கு,செப்.26

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தினமும் அபிஷேகம், விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. பத்தாவது நாளாள விஜய தசமியன்று மானம்பூ திருவிழாவும் நடைபெறவுள்ளது. (135)

### மத்தியஸ்தர் சபையின் பணிகள் மீண்டும் வழமைக்கு

அரியாலை,செப்.26

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் மத்தியஸ்தர் சபை மீண்டும் வழமைபோல ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்தியஸ்தர் சபையில் முறைப்பாடுகள் தாக்கல் செய்தவர்கள் பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை யாழ். வைத்திஸ்வராக் கல்லூரிக்கு சமுகம் கொடுத்து தங்கள் பிணக்குகளை தீர்த்துக்கொள்ள முடியும் என்று தவிசாளர் வி. சக்திவேல் அறிவித்துள்ளார். (17)

# இராணி அவரையை நடுங்கள் புரதச்சத்துணவு கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மக்களின் பிரதான உணவுகளில் மிக முக்கிமான புரத உணவு உட்கொள்ளல் வீதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. குடாநாட்டு மக்கள் தொகையில் சுமார் 60 தொடக்கம் 70 வீதமானோர் சராசரி மட்டத்தில் அல்லது அதற்குக் கீழ் நிலையிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் மக்களின் பிரதான விலங்குணவான கடல் மீன் கிடைப்பது அரிதான நிலையில் ஏனைய விலங்குணவான இறைச்சி, முட்டை, பால் என்பனவும் சராசரி குடும்பத்தவர்களால் வாங்க முடியாத மிகவும் அரிதான நிலை காணப்படுகின்றது.

இதனால், பெரும்பாலான மக்களின் அன்றாட உணவில் புரதம் உட்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. இத்தகைய நிலையால் குழந்தைகள், வளர்பராயத்தினர், கர்ப்பிணிப்பெண்கள் ஆகியோர் பாரியளவில் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியவர்களாகின்றனர்.

எனவே மக்கள் அனைவரும் தங்களுடைய வீடுகளில் அதிகூடிய தரமுள்ள புரத உணவுப்பயிரான இராணி அவரையை வளர்க்க முன்வரவேண்டும். இராணி அவரையானது ஒருவகை கொடிப்பயிராக உள்ளதுடன் இதன் காய், விதை, இலை, கிழங்கு அனைத்தையும் உணவாக உட்கொள்ளமுடியும்.

அத்துடன் மிகக்குறைந்த நீர்த்தேவை உள்ள பயிர் ஆகையால் இலகுவாக வீடுகளில் செய்கை பண்ணலாம். ஒவ்வொரு வீடுகளிலும் இரு கொடிகளாவது வளர்த்து வீட்டுக்குத் தேவையான நிறைவான புரதத்தை குறைந்த காலத்தில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே, இராணி அவரையை தங்களுடைய வீட்டுத் தோட்டத்தில் நடுகை செய்ய விரும்புவோர் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடமிருந்து விதைகளைப் பெற்று நட்டுப் பயன்பெறுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

கி.சிறீபாலசுந்தரம்
உதவி விவசாயப்பணிப்பாளர்,
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# பொலிஸார் - கொள்ளையர் பாணந்துறையில் மோதல்!

### சார்ஜன்ட் உட்பட மூவர் மரணம்

கொழும்பு, செப். 26

பாணந்துறை - வாதுவை பகுதியில் பொலிஸாருக்கும், கொள்ளையர்களுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

வாதுவை - வேரகம பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் கொள்ளையர்களைத் தேடும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். அப்போது அப்பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் வீட்டினுள் இருந்து தாக்குதலை மேற்கொண்ட கொள்ளையர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிவர்த்தன என்றழைக்கப்படும் சார்ஜன்டே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

### ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டில்

இன்பத்தின் நிறைவாய் | துயரத்தின் இமயமாய்

04 - 08 - 1984 | 07 - 10 - 2005



திதி: சதுர்த்தி 26.09.2006

## செல்வி தனுஷா மாதவராஜா

(2ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்,
பழைய மாணவி-மகளிர் மகா வித்தியாலயம், இறம்பைக்குளம்,வவுனியா.)

தூண்டாமணி விளக்கே! சுடர் ஒளியே!
நீ பிரிந்தே
ஆண்டொன்றே ஆனதுவே
நீ பிரிந்த காரணத்தால்
ஈண்டு துயர்க்கடலில்
இன்னும் துடிக்கின்றோம்!

என்றும் மீளாத் துயருடன்

பொன்னையா மாதவராஜா,
அன்னாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

பெற்றோர், தம்பி, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அம்மம்மா, உடன்பிறவாத தங்கை மற்றும் உற்றார், உறவினர்கள்.

### பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியில் ஊழியர் நலன்புரிச்சங்கம்

வலி.தென்மேற்கு,செப்.26

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையில் ஊழியர் நலன்புரிச் சங்கம் ஒன்று கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர். திருத்தேவி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. (135)

# மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நவரத்தினம் (கார்த்திகேசு)

கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நவரத்தினம் நேற்று (25.09.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சௌந்தலை தம்பதியரின் அன்பு மகனும், தியாகராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சின்னாச்சிப்பிள்ளையின் கணவரும், திருநாமச்சந்திரனின் (பிரதேச சபை, சாவகச்சேரி) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தவமணியின் அன்பு மாமனும் ஜெயதரன், அபிராமி, ஜெயக்குமார் (பிரதேச சபை, - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு பேரனும், புவசாந்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
திருநாமச்சந்திரன் (மகன்)
(பிரதேச சபை, சாவகச்சேரி)

### வடமராட்சியில் நாவல்பழ சீசன்

வடமராட்சி,செப்.26

வடமராட்சிப் பிரதேசத்தில் நாவற்பழ சீசன் ஆரம்பமாகியுள்ளது.

இங்குள்ள சந்தைகளில் ஒரு பாற்பேணி (கூண்டு) நாவற்பழம் 15 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள அம்பன், குடத்தனை ஆகிய இடங்களில் உள்ள நாவல் மரங்களிலிருந்து நாவற்பழம் எடுத்து வரப்பட்டு சந்தைப் படுத்தப்பட்டு வருகிறது.

## நெடுந்தீவு பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

நெடுந்தீவு பிரதேச சபையினால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட (இக்ராட்) ஒப்பந்தகாரரிடமிருந்தும், உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரரிடமும் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.

கோள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 27.09.2006 பிற்பகல் 3.30 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 09.10.2006 பிற்பகல் 1.30 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி: 09.10.2006 பிற்பகல் 2 மணி

கேள்விகள் ஏற்கவும், நிராகரிக்கவும் கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி ''செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை'' என்ற முகவரிக்கும் இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும். உறையில் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை சபையின் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | கலாசாரமண்டப வீதி, மீள்புனரமைப்பு | 3000.00 | 500.00 |
| 02. | ஐயரோடைவீதி மீள் புனரமைப்பு | 5000.00 | 500.00 |
| 03. | மின்சார இயந்திரவளவில் மலசலகூடம் அமைத்தல் | 1500.00 | 500.00 |
| 04. | பிரதேசசபை அலுவலக கூரை திருத்தம் | 2000.00 | 500.00 |
| 05. | பொதுச் சந்தையில் தளம் போடுதல் | 2000.00 | 500.00 |
| 06. | நெடுந்தீவு கிழக்கு ச.ச. நிலையக் கட்டட விஸ்தரிப்பு | 1500.00 | 500.00 |

நெடுந்தீவு பிரதேச சபை.
22.09.2006

செயலாளர்,
நெடுந்தீவு பிரதேசசபை,
நெடுந்தீவு.

(சி-51097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போக்குவரத்துத் தடைப்பட்டதால் வவுனியாவில் அந்தரித்து நின்ற பயணிகள் இவர்கள். கப்பலில் யாழ்ப்பாணம் வருவதற்காக நேற்றுக்காலை வவுனியாவிலிருந்து பஸ்களில் இவர்கள் திருகோணமலைக்கு அழைத்துச்செல்லப்பட இருந்தசமயம் எடுக்கப்பட்ட படங்கள்.

# ஈழத்தமிழர்கள் தனிநாடு பெற்றிட கருணாநிதி துணைநிற்க வேண்டும்

## சிதம்பரத்தில் நடந்த மாநாட்டில் பழ.நெடுமாறன் உரை

சிதம்பரம், செப்.26

ஈழத்தமிழர்கள் தனிநாடு பெற தமிழக முதல்வர் கருணாநிதி துணைநின்று தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என பழ.நெடுமாறன் முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி சார்பில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு சிதம்பரத்தில் கடந்த சனியன்று நடந்தது.

கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கி.வெங்கட்ராமன் தலைமை வகித்தார். ஆ.சிவஞானம் வரவேற்றார். பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றினார்.

அவர் தனதுரையில் கூறியதாவது:-

இலங்கை எம்.பிக்கள் குழுவை இந்தியப் பிரதமர் சந்திப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆனால், அதன்படி நடந்துகொள்ளவில்லை. தமிழக முதல்வர் அக்குழுவினரைச் சந்திக்கவில்லை. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்பி உண்மை நிலையை அறியவேண்டும்.

இலங்கை போர் தற்போது சர்வதேச அங்கீகாரத்தை நோக்கி நகர்கிறது.

விடுதலைப் புலிகள் 70 வீதமான நிலத்தை மீட்டுவிட்டனர். மீதமுள்ள 30 வீத இடத்தை மீட்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

பெரியார் காங்கிரஸிலிருந்து விலகி தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றினார். காமராஜர் இரண்டு பிரதமர்களை உருவாக்கி வரலாற்றில் இடம்பிடித்தார். அதுபோல் தமிழக முதல்வரும் தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தமிழர் இயக்க பொதுச் செயலர் தியாகு தமிழ்த் தேச பொதுவுடமைக் கட்சி பொதுச்செயலர் பெ.மணியரசன் உள்ளிட்டோர் பேசினர்.

தமிழ்த் தேச பொதுவுடைமைக் கட்சி சார்பில் சிதம்பரம் மேலவீதியில் சனிக்கிழமை நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பங்கேற்றார்.

அழைப்பிதழில் அவரது பெயர் கிடையாது. மாநாடு சிதரம்பரத்தில் நடைபெறுவதை அறிந்து வந்து மாநாட்டில் பங்கேற்றார். (ஐ)

## நிவாரணப்பொருள்கள் பெற பண்டத்தரிப்பில் காலக்கெடு

வலி.தென்மேற்கு,செப்.26

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்தோருக்கு முத்திரைக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்களை இவ்வாரம் முதல் வழங்கி வருகின்றது.

இதேவேளை 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியனவற்றையும் வழங்கி வருகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இவற்றை சங்கக்கிளைகளில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ஆ. நாகராசா தெரிவித்துள்ளார். (135)

# ஜே.வி.பி. தலைவருக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு!

## சு.கவை மோசமாக விமர்சித்ததால்!

கொழும்பு, செப். 26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மிக மோசமான முறையில் விமர்சித்தமையால் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கட்சிக்குள் பெரும் எதிர்ப்பினையும், அதிருப்தியினையும் எதிர்நோக்கியிருக்கிறார் என ஜே.வி.பியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது மிகவும் பழைமையான தொழிலைச் செய்துவருவதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மிக மோசமான முறையில் பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது விமர்சித்திருந்தார்.

ஜே.வி.பி. தலைவரின் இந்தக் கூற்று தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் உட்பட இதர முக்கியஸ்தர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர்.

இந்நிலையில் ஜே.வி.பி. தலைவரின் இந்தக் கூற்று அக்கட்சிக்குள் பெரும் சலசலப்பை உண்டுபண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுடன் இணைந்து செயலாற்றுவது குறித்தான பேச்சுகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மறுபுறம் கட்சித் தலைவரின் இவ்வாறான கருத்துகள் துரதிஷ்டவசமானவையென ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடம் வருத்தத்தைத் வெளியிட்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக கட்சித்தலைவரின் கூற்றுக் குறித்து ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் சிலர் தனியே கூடி ஆராய்ந்திருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது. (த)

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சண்டை இடையில் சிக்கி குடும்பப் பெண் காயம்

ஏறாவூர், செப்.26

வாழைச்சேனை - சுங்காங்கேணிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஏழு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கே. தங்கப்பிள்ளை (வயது 51) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து உடனடியாக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் சுங்காங்கேணிப் பகுதியில் இரண்டு ஆயுதக்குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கித்தாக்குதல் சம்பவத்தின்போது இடையில் அகப்பட்டு இந்தக் குடும்பப் பெண் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# ஜோசப் எம்.பியின் இடத்துக்கு மாமனிதர் சந்திரநேருவின் மகன்

ஆலையடிவேம்பு, செப். 26

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்திற்கு மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் மகனான சந்திரகாந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் சந்திரகாந்தன் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கிறார். இவரைக் கொழும்பில் வரவேற்று அழைத்து வருவதற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் விசேட பஸ் ஒன்று மூலம் கொழும்பு சென்றுள்ளார்கள். (த)

## ஏ-9 வீதியைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினங்களுக்கு முன்னர் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

அவ்வாறே கொழும்பு சமாதான செயலகத்துக்கும் அது குறித்து அறிவித்திருந்தார். அரசுத் தரப்பிடம் இருந்து சிறந்த பதில் ஒன்றை எதிர்பார்த்துள்ளோம்.

ஏ-9 வீதியைத் திறப்பதற்குத் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கப் புலிகள் தயாராக உள்ளனர். எனினும், அரசிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-12)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தென்னிலங்கை யில் தங்கியிருந்த இரண்டாயிரத்து 500 பேரில், சுமார் ஆயிரம் பேர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கென நேற்று திருமலக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை வவுனியா நகரப் பகுதிக்கு அழைக்கப்பட்ட பொதுமக்கள், அங்கிருந்து 18 பஸ்களில் ஏற்றப்பட்டு நேற்றுமாலை திருகோணமலையை வந்தடைந்தனர் என்று திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

'ஜெற்லைனர்' என்ற கப்பல் மேற்படி பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று காலை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (164-68-79-111)

## உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்தைக் கண்காணித்தது என்றும் மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

மீண்டும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பொதுமக்களின் போக்குவரத்துக்காக உயிலங்குளம் வீதி திறக்கப்படும் என்று மன்னார் மாவட்ட செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ-12)

## ரோந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் கடற்படைப் பிரிவினர் கடல் சுற்றுக் காவல் பணியில் ஈடு பட்டிருந்த போது இம்மோதல் நடைபெற்றது. கடல் சுற்றுக் காவல் பணியில் 25 இக்கும் மேற்பட்ட எமது கடற்கலங்கள் ஈடுபட்டிருந்தன.

அப்போது ஸ்ரீலங்கா கடற்படையின் 20க்கும் மேற்பட்ட கடற்கலங்கள் இடைமறித்தன. இதனையடுத்து, ஞாயிற்றுக்கிழமை இரவு 9.45 மணி தொடக்கம் 5 மணித்தியாலங்களுக்கும் மேலாக கடும் மோதல் நடைபெற்றது. இதில் ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு அதிவேக டோரா தாக்குதல் படகு கடும் சேதமடைந்துள்ளது. கடற்புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர் என்றார் இளந்திரையன். (த)

## அத்தியாவசிய சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள், மருந்துப்பொருள் விற்பனை மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகள் அத்தியாவசிய சேவைகளாக அரசால் நேற்றைய தினம் பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்தச் சேவைகள் மக்களுக்குத் தடையின்றிக் கிடைப்பதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வேலை நிறுத்தங்கள் பணிப்புறக்கணிப்புகளில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் அரச சேவையிலிருந்து நிரந்தரமாக விலக்கப்படவும் இந்தப் பிரகடனம் வழி செய்கிறது. கடந்த மாதம் மூன்றாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் இந்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை மீறுவோர், சேவைகளுக்கு இடையூறுகளை, தடைகளை ஏற்படுத்துவோர் குற்றவாளிகளாகக் காணப்படுவரென்று அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இந்த வர்த்தமானி அறிவித்தலிலேயே திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. (ஐ-12)

## புல்மோட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் கடற்புலிகள் எழுபதுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்றும் முப்பது பேர் காயமடைந்திருக்கக் கூடும் என்றும் அவர் சொன்னார்.

இதேசமயம் இச்சமரில் காயமடைந்த ஐந்து கடற்படையினர் சிகிச்சைக்காகக் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டனர் என்றும் அவர் சொன்னார். (உ)

கிராம உத்தியோகத்தர் - தரம் - II
போட்டிப்பரீட்சைக்கான மாதிரி
வினாத்தாள் விடைகளுடன் இங்கு
கிடைக்கும்
திகழ்கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org